## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்

## அ.வ.எண். 259/2020

2021 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் நாள் வாதிகள் தரப்பு சாட்சி தனியார் வங்கி கிளை வா.சா.3 ஆக வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1873 ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி இளநிலை உதவியாளர் திருமதி. இம்மாராணி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | J.R.பாலவெங்கட்ராமன் | தொழில்: | KVB வங்கி கிளை மேலாளர் |
| த/பெ: | ராகவன் | ஜாதி: | --- |
| முகவரி: | KVB வங்கி கிளை மேலாளர், மூலனூர் கிளை | சமயம்: | இந்து |
| தாலுக்கா: | தாராபுரம் | வயது: | 38 |
| மாவட்டம்: | திருப்பூர் | | |

**25.11.2021**

**முதல் விசாரணை**

நான் சமூகம் நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையின் பேரில் இங்கு சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது கரூர் வைஸ்யா வங்கி மூலனூர் கிளை மேலாளராக பணி புரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 ல் கண்டுள்ள பக்கம் எண் 2 ல் சொல்லப்பட்டுள்ள வங்கி கணக்கு எண் எங்களது வங்கியினுடையதுதான். அக்கணக்கு எங்களது வங்கி வாடிக்கையாளர் பூபதி என்பவரின் பேரில் உள்ளது. அது சேமிப்பு கணக்கு ஆகும். எங்களது வங்கி ஆவணங்களின் படி அவரது விலாசம் 420 / 8 பி / NA காட்டுவட்டம் ராமசாமி நகர், திருவாக்கவுண்டனூர், சேலம் என்ற முகவரி உள்ளது. என்னிடம் காட்டப்படும் மேற்படி வா.சா.ஆ 7 ஆவணத்தில் கண்டுள்ள காசோலை எண்கள் 000001, 000002 ஆகியவைகள் எங்கள் வங்கியில் வழங்கப்பட்டது. மேற்படி காசோலைகள் யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் பூபதி என்பவருக்கு கொடுக்கப்பட்டது. அவர் கணக்கில் 12.01.2016 ம் தேதியிட்ட மேற்படி காசோலைகள் இரண்டும் எங்கள் வங்கியின் வசூலுக்கு வந்ததா என்றால் எங்கள் வங்கிக்கு வசூலுக்கு வரவில்லை. அவரது கணக்கிலிருந்து பணம் எதுவும் பரிமாற்றம் செய்யப்படவில்லை. நான் இன்று மேற்படி பூபதி என்பவருடைய வங்கி கணக்கிற்கான கடந்த 12.01.2016 லிருந்து 11.04.2016 வரையிலான வங்கி கணக்கு வரவு செலவை காட்டகூடிய கணக்கு பட்டியல் (Statement of Account) வா.சா.ஆ 8 ஆகும். அந்த வங்கி கணக்கு பட்டியலில் 3 மாதத்தில் 6 லட்சம் தொகை பரிமாற்றம் எதுவும் நடைபெற்றதா என்றால் இல்லை. மேற்படி 12.01.2016 முதல் 11.04.2016 தேதிக்கு பின்னர் எங்கள் வங்கிக்கு மேற்படி காசோலைகள் வசூலுக்கு வரவில்லை.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எங்களது வங்கியில் கடந்த பிப்ரவரி மாதம் 2007 ம் ஆண்டு பணிக்கு சேர்ந்தேன். கடந்த 12.01.2016 ல் நான் இந்த வங்கியின் கிளையில் பணிபுரிய வில்லை. மேற்படி காசோலை Account Payee காசோலையா அல்லது வேறு வகையிலான காசோலையா என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கும் முன் அழைப்பாணையில் கண்டுள்ள நபரையோ அல்லது வழக்கறிஞரையோ சந்தித்து விசாரித்தீர்களா என்றால் சந்திக்க வில்லை. நான் இதற்கு முன்பு வா.சா.ஆ 7 ஆவணத்தை பார்த்ததில்லை. வா.சா.ஆ 7 கிரய ஆவணத்தின் படி பூபதி என்பவர் வேலுசாமி என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளதாக காணப்பட்டுள்ளது. சேலத்திற்கு மூலனூருக்கும் சுமார் 130 கி.மீ தொலைவு இருக்கும். மேற்படி காசோலையை பெற்றுகொண்ட வேலுசாமி உள்ள குமாரபாளையத்துக்கும் மூலனூருக்கும் சுமார் 90 கி.மீ தொலைவு இருக்கும். குமாரபாளையத்தில் உள்ள வேலுசாமி மூலனூரில் உள்ள எங்கள் வங்கிக்கு வந்து அவருக்கு கொடுக்கப்பட்ட Bearer Cheque ஐ கொண்டு வந்து செக்கிற்கான பணத்தை கேட்கும் பட்சத்தில் வங்கியில் உள்ள வாடிக்கையாளர் அறிமுகம் செய்தால் தான் வேலுசாமிக்கு பணம் பட்டுவாடா செய்ய முடியும் என்றால் சரிதான். மேற்படி Bearer செக்கை வைத்து வேலுசாமி மூலனூர் கிளைக்கு நேரடியாக வராமல் இங்குள்ள வேறு நபரிடம் Discount செய்து பணம் வாங்கி கொள்ளலாம் என்றால் சரிதான். 5 லட்சத்திற்கு மேல் காசோலை கொடுக்கப்பட்டால் Positive Payment System முறைப்படி காசோலையானது மூன்று வகையாக ஆய்வுக்குட்படுத்தி தான் காசோலைக்கு பணம் வழங்கப்படும், அதில் ஒன்று அக்காசோலை உரிய நபருக்கு தான் கொடுக்கப்பட்டதா, இன்னாருக்கு தான் கொடுக்கப்பட்டதா, கொடுக்கப்பட்ட தொகையை ஆய்வு செய்து தான் பணம் வழங்குவோம். இது போன்று குமாரபாளையத்தில் இருக்கும் நபருக்கு மூலனூரில் இருப்பவர் காசோலை கொடுத்து அதை பெறுவதில் நடைமுறை சிக்கல் இருக்கும் என்றால் சரிதான். காசோலைகளுக்கு ஆயுட்காலம் 6 மாதங்களிலிருந்து 3 மாதங்கள் ஆக 01.04.2012 யிலிருந்து நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இக்காசோலையை பெற்ற வேலுசாமி எங்கள் வங்கிக்கு வந்து தனக்கு காசோலையாக கொடுக்கப்பட்ட ரூபாய் 6 லட்சத்தை தனக்கு காசோலை கொடுத்த பூபதி பணம் கொடுக்கவில்லை என்று எவ்வித புகாரும் தெரிவிக்க வில்லை என்றால் சரிதான். அதே போன்று Private Bankers தனிநபர்கள் யாரும் மேற்படி காசோலைகள் குறித்து தங்களுக்கு பணம் வர வேண்டியுள்ளது என்று எவ்வித புகாரும் எங்கள் வங்கிக்கு தெரிவிக்க வில்லை. கிரைய தொகை சம்பந்தமாக பூபதி வேலுசாமிக்கு பணம் கொடுத்தாரா இல்லையா என்பது

அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள பிரச்சனை என்றால் சரிதான். மேலும் Discount க்கு வாங்கிய Private Bankers 3 மாதம் ஆயுட்காலம் தெரியாமல் அதன் பின்னிட்டு தங்கள் வங்கிக்கு மேற்படி காசோலையை அனுப்பியிருந்தால் நாங்கள் எங்கள் வங்கி சார்பில் Out of Date என்ற காரணம் சொல்லி திருப்பி விடுவோம். அது போன்று Private Banker வேலுசாமிக்கு பணம் கொடுத்து அதனை பெற்று கொள்வது சம்பந்தமாக பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் அது அவர்களுக்குள் தீர்க்க வேண்டியது என்றால் சரிதான்.